**<u>நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்</u>**

**<u>முன்னிலை</u>** :- செல்வி.என்.திலகேஸ்வரி, பி.எஸ்.சி,எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் (FAC), கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்

2019-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30 -ம் நாள் திங்கட்கிழமை,

*(திருவள்ளுவராண்டு, 2050, ஸ்ரீ விஹாரி வருடம், மார்கழி திங்கள் 14 -ம் நாள் திங்கட்கிழமை)*

**<u>ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.1706/2019</u>**

**<u>அரசுக்காக:-</u>**

காவல் ஆய்வாளர்,
அனைத்து மகளிர் காவல் நிலையம் பேரூர்,
கோயமுத்தூர். (காவல் நிலைய குற்ற எண். 19/2015). ... புகார்தாரர்

/எதிர்/

1. பாஸ்கர் (39),
த.பெ.நாராயணன்.

2.ஸ்ரீதேவி (வயது 37)
த.பெ.தேவராஜ்.

... எதிரிகள்

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 11.10.2019 ம் தேதியன்று இந்நீதிமன்றக் வழக்குக்கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இறுதியாக 20.12.2019 ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-II அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.லட்சும நாராயணன், அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களும் கேட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்த பின்பு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை :-</u>**

இது காவல்துறை குற்ற அறிக்கையின் படியான வழக்காகும்.

2. **<u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

கடந்த 31.08.2007 ம் தேதியன்று 1 ம் எதிரிக்கும் புகார்தாரருக்கும் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின் பயனாக 06.02.2010 ம் தேதி ஒரு ஆண்குழந்தை

பிறந்ததாகவும், 2ம் எதிரி, 3ம் எதிரியின் நிறுவனத்தில் வரவேற்பாளராகப் பணி செய்த போது தகாத உறவு வைத்துக்கொண்டு வீட்டுக்கு அழைத்து வருவதும், புகார்தாரர் மற்றும் அவரின் குழந்தையின் முன்னிலையில் மேற்படி 2ம் எதிரியை அழைத்து வந்தது வாதிக்கும், அவரது குழந்தைக்கும் மன ரீதியாக கொடுமை செய்ததாகவும், மனுதாரர் கேட்டதற்கு 1 மற்றும் 2 எதிரிகள் அப்படி தான் இருப்போம், இருந்தால் இரு, இல்லையென்றால் வீட்டை விட்டு சென்று விடு என்று விரட்டியதாகவும், 1ம் எதிரி, 2ம் எதிரியுடன் சேர்ந்து கொண்டு அடிமை போல் நடத்தியதாக எதிரிகளின் மீது 498(A), 494 இ.த.ச. பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக பேரூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானார். எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு போதிய அவகாசம் அளிக்கப்பட்டு எதிரிகளின் மீது 498(A), 494 இ.த.ச. பிரிவின் கீழ் கு.வி.மு.ச.240ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார்கள். பின்னர் அரசு தரப்பில் சாட்சிய விசாரணை தொடங்கியது.

4. அரசுத்தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் பொருட்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரை பட்டியலிடப்பட்டு அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அரசு தரப்பில் 2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4. **அரசுத் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் பின்வருமாறு:**

**அ.சா.1 திருமதி. இந்து** தனது சாட்சியத்தில் கடந்த 23.03.2015 ம் தேதி தனக்கும், 1ம் எதிரிக்கும் குடும்பத்தில் சிறு சிறு மன வேறுபாடுகள் இருந்த காரணத்தினால் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், தனக்கும் 1ம் எதிரிக்கும் 2 வருடங்களுக்கு முன்பு விவாகரத்து ஆகி விட்டதாகவும், தானும் 1ம் எதிரியும் சமாதானம் ஆகி விட்டதாகவும், சாட்சியம் அளித்து அரசு தரப்பில் இருந்து விலகி பிறழ் சாட்சியமாக மாறி சாட்சியம்அளித்துள்ளார். **அ.சா.2,இந்துராணி** காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் 23.03.2015ம் தேதி கூடுதல் மகளிர் நீதிமனறத்திலிருந்து பெறப்பட்ட உத்தரவின் பேரில்

குற்ற எண்05/2015 சட்ட பிரிவு 498(A), 494 இ.த.ச. பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு புலன் விசாரணை சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சியம் அ.சா.2 உடன் முடித்துக்கொள்ளப்பட்டு மற்ற சாட்சிகள் விலக்கப்பட்டு, அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில், எதிரிகளுக்கு பாதகமான பகுதிகள் குறித்து கு.வி.மு.ச. 313(1)(ஆ) பிரிவின்படி வினவியபோது, எதிரிகள் சாட்சியத்தினை பொய் சாட்சிகள் என்றும், தாங்கள் நிரபராதிகள் என்றும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

6. <u>தீர்வுக்குரிய பிரச்சனை:</u>

தற்போது தீர்வுக்குரிய பிரச்சனை அரசு தரப்பில் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 417, 323, 506(i) இ.த.ச.வின் படி சுமத்தப்பட்டுள்ளக் குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>7. தீர்வுக்குரிய பிரச்சனை:</u>**

தற்போது தீர்வுக்குரிய பிரச்சனை அரசு தரப்பில் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 498(A), 494 இ.த.ச வின் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

தீர்வு:

இவ்வழக்கில் புகார்தாரரும், சாட்சியுமான அ.சா.1 இந்து, அ.சா.2, ஸ்ரீதேவி, காவல் ஆய்வாளர் ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

8. கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1 ம் எதிரிகளும் சமாதானமாக சென்று அரசு தரப்பு வழக்கினை மறுத்து சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அ.சா.2 ன் சாட்சியம் மற்றும் அ.த.சா.ஆ.1 மற்றும் அ.த.சா.ஆ.2 சான்றாவணங்கள் வாயிலாக எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளைச் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதாக வாதிட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞரும் தனது தரப்பில் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும் எதிரிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. இரு தரப்பு வாதங்களும் கேட்கட்பட்டன. ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

10. இந்நிலையில் அ.சா.1 இந்து எதிரிகளும் தானும் சமாதானமாக சென்று விட்டதாகவும் வழக்கை மேற்கொண்டு நடத்த விருப்பம் இல்லை என்றும் கூறி கு.வி.மு.ச பிரிவு 320 ன் கீழ் மனு ஒன்றை தாக்கல் செய்தார்கள். அந்த மனு சி.எம்.பி.2965/2019 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு சட்டப்பிரிவு 498(A), 494 இ.த.ச.வின் படி சுமத்தப்பட்டுள்ளக் குற்றச்சாட்டு சமரசமாக செல்ல அனுமதிக்க இயலாத குற்றங்கள் என்பதால் அந்த மனு 13.12.2019 அன்று தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது.

11. மேலும் அ.சா.1 இந்து, புகார் மனுவிலும் விசாரணை வாக்குமூலத்திலும் சொன்ன விவரங்களுக்கு முரணாக எதிரிகளுடன் சமதானமாக சென்றுவிட்டேன் என சாட்சியம் அளித்துள்ளார். 1 ம் எதிரி 2 ம் எதிரியுடன் வீட்டிற்கு அழைத்து வந்து வாதிக்கும் அவரது குழந்தைக்கும் மன ரீதியாக கொடுமை செய்ததாகவும், அது குறித்து வாதி அவர்களிடம் கேட்ட போது 2 எதிரிகளும் சேர்ந்து கொண்டு நாங்கள் இப்படி தான் இருப்போம் இருந்தால் இரு இல்லையென்றால் வீட்டை விட்டு சென்று விடு என்று மிரட்டியதாகவும், இது குறித்து கடந்த 05.06.2014 ம் தேதி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வாதி புகார் கொடுத்து, புகாரின் பேரில் சமாதானம் செய்து வைத்த பின்பும் மீண்டும் 2 எதிரிகளும் சேர்ந்து கொண்டு வாதியையும் அவரது குழந்தையையும் அடிமை போல் நடத்தி கொடுமைப்படுத்தியதாகவோ 1 ம் எதிரிக்கும் வாதிக்கும் நடைபெற்ற திருமணம் நடைமுறையில் இருக்கும் போது 2 ம் எதிரியை 1 ம் எதிரி திருமணம் செய்து கொண்டதாகவோ அவர் சாட்சியம் அளிக்கவில்லை.

12. எனவே அ.சா.2 ஸ்ரீதேவி, விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளை குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் கருதுகின்றது. அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்ட சாட்சியங்களும் எதிரிகளை குற்றச்சாட்டுடன் சந்தேகத்திற்கு இடமின்றி இணைக்கும் வகையில் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

13. எனவே அரசுத்தரப்பு வழக்கில் ஏற்பட்ட சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக வழங்கி அவர்களை குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

14. முடிவில் எதிரிகள் சட்டப்பிரிவுகள் 498(A), 494 இ.த.ச. ன் படி குற்றவாளி இல்லை என்று கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் படி தீர்மானித்து, அவர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

15. வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை அதனால் வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் வழக்கின் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு ரத்தாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2019-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30-ம் நாள் திங்கட்கிழமை ,அன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

செல்வி.என்.திலகேஸ்வரி,பி.எஸ்.சி.,எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர்(FAC),
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

<u>அட்டவணை</u>:-

<u>அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்</u>:-

அ.சா.1 :- இந்து

அ.சா.2 :- ஸ்ரீதேவி, காவல் ஆய்வாளர்

<u>அரசுத் தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u>:-

அ.த.சா.ஆ 1 :- புகாரில் உள்ள கையெழுத்து

அ.த.சா.ஆ 2 :- 23.03.2015 தேதியிட்ட அச்சு முதல் தகவல் அறிக்கை

<u>அரசுத் தரப்பில் குறியிடப்பட்டுள்ள சான்று பொருள்</u>: இல்லை

<u>எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணம்</u>: இல்லை

செல்வி.என்.திலகேஸ்வரி,பி.எஸ்.சி.,எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் (FAC),
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்

<u>பின்சேர்க்கை</u>:-

1.வழக்கின் காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள் .

2.வழக்கின் காலத்தில் சாட்சிகள் 3 நாட்களுக்கு மேல் விசாரணை இன்றி நிறுத்தி வைக்கப்படவில்லை.

3.வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

4.முடிவில் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து எதிரிகளை கு.வி.மு.ச.248(1) பிரிவின் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டது.

5.வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை அதனால் வழக்குச் சொத்துப் பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

செல்வி.என்.திலகேஸ்வரி,பி.எஸ்.சி.,எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர்,(FAC)
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

நகல்:-
மாண்புமிகு தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு
பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

/உண்மைநகல்/

நீதித்துறை நடுவர்,(FAC)
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.